செ. கு. எண்: 045 நாள் :21.07.2015

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 21.7.2015

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக 4.5.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியக்காவிளை கிராமம், விளாகத்து புத்தன்வீடு பகுதியைச் சேர்ந்த திரு. செல்வராஜ்;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், காட்டுப்பையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சண்முகம் என்பவரின் மகள் மேனகா;

6.5.2015 அன்று விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், அப்பனம்பட்டி கிராமம் அருகே, திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், குருவிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. தமிழ்மணி என்பவரின் மகன் வாசுதேவன்;

தருமபுரி மாவட்டம், பங்குநத்தம் தரப்பு, குப்புதாஸ்கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த திரு. நாராயணன் என்பவரின் மகள் அகிலா;

7.5.2015 அன்று தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம். சத்தியநாதபுரம் தரப்பு கரியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. முனியப்பன் என்பவரின் மகன் சத்திவேல்;

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கழுகுமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. முத்துக்காளி என்பவரின் மனைவி அன்னபாக்கியம்;

10.5.2015 அன்று சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடாச்சலம் என்பவரின் மகள் சாந்தி;

11.5.2015 அன்று திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஆதனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் அமிர்தலிங்கம்; நன்னிலம் வட்டம், சன்னாநல்லூர் சரகம், முடிகொண்டான் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுதாகர் என்பவரின் மனைவி ஆனந்தி;

12.5.2015 அன்று கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், ஏ.அகரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியன் என்பவரின் மனைவி லட்சுமி

–– ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**